# பொதுப்பணித்துறை கட்டடங்கள்

**கோரிக்கை எண் – 39**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2014–2015**

**ஓ.பன்னீர்செல்வம்**
நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2014

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1 | பொது விவரங்கள் | 1 |
| 2 | கடந்த மூன்று ஆண்டுகளில் முடிக்கப்பட்ட பெரும் பணிகள் | 4 |
| 3 | நடைபெற்று வரும் பணிகள் | 34 |
| 4 | தொடங்கப்படவுள்ள பணிகள் | 93 |
| 5 | அமைப்பு | 114 |
| 6 | நிதி ஒதுக்கீடு 2014–2015 | 117 |

# பொதுப்பணித்துறை
# கட்டடங்கள்

# கொள்கை விளக்கக் குறிப்பு 2014–2015

**"இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டும்! அந்த லட்சியத்தை நோக்கிய பயணத்தில் நாம் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறோம்"**

**"எந்தத் தொழிலை நீங்கள் செய்கிறீர்களோ, அதற்காக உங்களை தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய முறைகள் தேவை! புதிய வழிகள் தேவை! புதிய உத்திகள் தேவை! புதிய அணுமுறைகள் தேவை!"**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## முன்னுரை

கட்டடங்கள் என்பது, ஒரு சமுதாயத்தின் தனித்துவ அடையாளம் ஆகும். அவை கல்லும் மண்ணும் கலந்து உருவாக்கப்பட்ட கட்டுமானங்கள் மட்டுமல்ல, நமது தொழில் நுட்பத் திறனையும், வரலாற்றுச் சிறப்பையும் வருங்காலச் சந்ததியினருக்கு எடுத்துக்காட்டுகின்ற சான்றுகள் ஆகும்.

கட்டடங்கள், இன்றைய தலைமுறையினர் மட்டுமின்றி வருங்காலத் தலைமுறையினரும் பயன்படுத்தும் வகையில் காலங்காலமாக நிலைத்து

நின்று பயன் தருவன ஆகும். இதனைக் கருத்தில் கொண்டே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், கட்டடங்கள் பாதுகாப்பானதாகவும், கலை நயமிக்கதாகவும், சிறப்பான முகப்பு மாறும் வடிவமைப்பு கொண்டதாகவும் அமைந்திட வேண்டும் என்று அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கி அவை திறமுடன் உருவாகிடக் காரணமாய் இருக்கின்றார்.

156 ஆண்டு கால பழைமை வாய்ந்த பொதுப்பணித்துறை இன்றைய நவீன தொழில்நுட்பம் மற்றும் அனுபவங்களைக் கொண்டு, பாதுகாப்பான அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்கும் தரமான சேவையை மக்களுக்கு அளித்திடவும் சீரிய முறையில் செயலாற்றி வருகிறது. இந்திய தர நிறுவன விதிகளில் நிர்ணயித்துள்ள விவரக் குறிப்பின் அடிப்படையில், விஞ்ஞானம் மற்றும் நவீன தற்கால தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டட அமைப்பு, பொது கட்டடங்களின் கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி அரசுத் துறைகளுக்கான பல்வேறு பொதுக்கட்டடங்களை, நன்கு உருவான நடைமுறைகள், நவீன தொழில்நுட்பம், மின் ஆளுகை, அழகிய முகப்பு மற்றும் வடிவமைப்புடன், நியாயமான செலவில் கட்டித்தருகின்ற நற்பணியை பொதுப்பணித்துறை கட்டடத்துறை மிகச்சிறப்புடன் செயலாற்றி வருகிறது.

# பொதுப்பணித் துறை
# கட்டடங்கள்

## 1.0. பொது

பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பு, மாநில அரசின் பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப பொதுக் கட்டடங்களைக் கட்ட திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட கட்டடத் தொடர்புடைய பணிகளைத் திறம்படச் செயல்படுத்தி வருகிறது.

பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பு, மாநில மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்கள், கழகங்கள் போன்றவற்றுக்கான கட்டட கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. நினைவுச் சின்னங்கள் அமைத்தல் மற்றும் நினைவகங்கள் கட்டுதல் ஆகிய பணிகளும் இவ்வமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும்,

பாரம்பரிய கட்டடங்களைப் புதுப்பித்தல், புனரமைத்தல் ஆகிய பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது.

சென்னை மற்றும் உதகமண்டலத்திலுள்ள மேதகு ஆளுநர் அவர்களின் மாளிகைகள், தலைமைச் செயலகம், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு நீதியரசர்கள் மற்றும் மிகமுக்கிய பிரமுகர்களுக்கான இல்லங்கள், அரசு ஆய்வு மாளிகைகள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் ஆகியவற்றை இவ்வமைப்பு பராமரித்து வருகிறது.

மிகமிக முக்கிய பிரமுகர்கள் வருகையின்போது மேற்கொள்ளப்படும் பணிகளான மேடை அமைத்தல், தடுப்புகள் அமைத்தல், ஒலி மற்றும் ஒளி அமைத்தல் ஆகிய பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது.

இவ்வமைப்புடன் இயங்கி வரும் கட்டடக் கலைப் பிரிவு புதிய கட்டடங்களுக்கான ஆரம்பநிலை கட்டட வரைபடம், விரிவான வரைபடங்கள், கட்டட முகப்பு மற்றும் குறுக்கு வெட்டுத் தோற்ற வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் வண்ணம் தீட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், இப்பிரிவு, பெருந்திட்ட வளாகங்களுக்கான தள வரைபடம் தயாரிக்கும்பணிகளுடன் நினைவகங்கள், மணிமண்டபங்கள், பூங்காக்கள் ஆகியவற்றுக்கான கட்டட மனையமைவு வரைபடம் தயாரிக்கும் பணிகளையும் செய்து வருகிறது. இவை தவிர, ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம், பள்ளிகளுக்கான வகுப்பறைகள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர் விடுதிகளுக்கான மாதிரி வடிவமைப்பு வரைபடம் தயாரித்தல் போன்ற பணிகளையும் இவ்வமைப்பு செய்து வருகிறது.

# 2. கடந்த மூன்று ஆண்டுகளில் முடிக்கப்பட்ட பெரும் பணிகள்

## 2.1. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தினை புனரமைத்து, நுழைவு வாயிலின் முகப்பினை மாற்றி அழகுபடுத்தி புதுப்பிக்கும் பணி





மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தினை புதுப்பொலிவுடன் புனரமைக்கும் பணிக்கு **5.50** கோடி ரூபாயும், நுழைவு வாயிலின் முகப்பினை மாற்றி அழகுபடுத்துதல் மற்றும் முன்பக்க சுற்றுச் சுவரினை புதுப்பித்தல் ஆகிய பணிகளுக்கு **3.40** கோடி ரூபாயும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, **8** மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **09.12.2012** அன்று திறந்து வைத்தார்கள்.

## 2.2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்கும் விடுதிக் கட்டடம்









திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்கும் விடுதிக் கட்டடம் (யாத்ரி நிவாஸ்) 42.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, 30.06.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## 2.3. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தை தமிழ்நாடு அரசு பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையாக மாற்றியமைக்க, **32.91** கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் முடிவடைந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட மருத்துவமனையை **21.02.2014** அன்று திறந்து வைத்தார்கள். இந்த தமிழ்நாடு அரசு பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை தற்போது முழுமையாகச் செயல்பட்டு வருகிறது.



**பொதுப் பிரிவு**

**பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை**



**கேத் லேப்**

**பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை**




**எம்.ஆர்.ஐ. ஸ்கேன்**

**பன்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை**



**அறுவை சிகிச்சை அரங்கு**

**பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை**

## 2.4. சென்னை, கிண்டி காந்தி மண்டபம் வளாகத்தில் உள்ள நினைவகங்களை புதுப்பிக்கும் பணி





சென்னை, கிண்டி சர்தார் பட்டேல் சாலையில் உள்ள காந்தி மண்டபம் வளாகத்தில் அமைந்துள்ள நினைவகங்களை 11.61 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணி முடிக்கப்பட்டு 27.06.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**2.5. சென்னை தலைமைச் செயலகம் நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டட முகப்புத் தோற்றத்தினை மேம்படுத்தும் பணி**




சென்னை தலைமைச் செயலகம் நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டட முகப்புத் தோற்றத்தினை, 28.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி முடிக்கப்பட்டு 10.07.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## 2.6. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் எழில்மிகு அலங்கார வளைவு



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 2012ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவைக் கொண்டாடும் வகையில் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்ட எழில்மிகு அலங்கார வளைவு அமைக்கும் பணி 1.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு 20.06.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## 2.7. முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களின் திருவுருவச் சிலையுடன் மணிமண்டபம் அமைத்தல்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களுக்கு தேனி மாவட்டம், லோயர் கேம்ப் எனும் இடத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணிக்கு 1.25 கோடி ரூபாய் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணி 8 மாத

காலத்தில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.01.2013 அன்று திறந்து வைத்தார்கள்.

**2.8. திருவண்ணாமலையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடம்**



திருவண்ணாமலையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடம், 130.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி முடிக்கப்பட்டு, 22.08.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## 2.9. திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமம், ஸ்ரீரங்கத்தில் தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி



நிர்வாக அலுவலகக் கட்டடம்



பல்வகை அலுவலகக் கட்டடம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமம், ஸ்ரீரங்கத்தில்

**75.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு **21.08.2013** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**2.10. திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர்குட்டப்பட்டு கிராமம், மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிர்வாகக் கட்டடம்**




**நிர்வாகக் கட்டடம்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர்குட்டப்பட்டு கிராமத்தில் மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், நிர்வாகக் கட்டடம் கட்டும் பணி 7.70 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், விடுதிக் கட்டடம் கட்டும் பணி **6.85** கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**2.11. சென்னை பழைய மத்திய சிறைச்சாலை வளாகத்தில் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு புதிய கட்டடம்**



சென்னை பழைய மத்திய சிறைச்சாலை வளாகத்தில் சென்னை மருத்துவக்

கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணிகள் **56.63** கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **01.03.2013** அன்று திறந்து வைக்கப்பட்டது.

**2.12. சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை மையக் கட்டடம்**




சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை மையக் கட்டடம் கட்டும் பணிகள் **17.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **01.03.2013** அன்று திறந்து வைத்தார்கள்.

**2.13. சென்னை திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் பன்னடுக்கு மாடிக் கட்டடம்**



சென்னை, திருவல்லிக்கேணி, அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில், **16.65** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பன்னடுக்கு மாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **01.03.2013** அன்று திறந்து வைத்தார்கள்.

## 2.14. சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கூடுதல் கட்டடம்



சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கூடுதல் கட்டடம் கட்டும் பணிகள் **20.63** கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **03.03.2012** அன்று திறந்து வைக்கப்பட்டது.

## 2.15. சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில் பன்னடுக்கு மாடிக் கட்டடம்



சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில், தரைதளம் மற்றும் ஆறு தளங்கள் கொண்ட பன்னடுக்கு மாடிக் கட்டடம் கட்டும் பணி 41.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 30.12.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**2.16. சென்னை எழும்பூர் அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில், மகப்பேறு மருத்துவம் மற்றும் மகளிர் நோயியல் நிலையத்திற்கு பன்னடுக்கு மாடிக் கட்டடம்**



சென்னை, எழும்பூர் அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில், மகப்பேறு மருத்துவம் மற்றும் மகளிர் நோயியல் நிலையத்திற்கு பன்னடுக்கு மாடிக் கட்டடம் கட்டும் பணி **56.32** கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, **21.02.2014** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**2.17. சேலம் மாவட்டம், சங்ககிரியில் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவுச் சின்னம்**



சேலம் மாவட்டம், சங்ககிரியில் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் பணி **60.00** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, **23.12.2013** அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## 2.18. தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையில் கரிகால் சோழனுக்கு மணிமண்டபம்





தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையில் கரிகால் சோழனுக்கு மணிமண்டபம் கட்டும் பணி 2.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 12.02.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## 2.19. சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், மாற்றுவழி பிணக்குகள் தீர்வு மையக் கட்டடம்



சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் 4.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாற்றுவழி பிணக்குகள் தீர்வு மையக் கட்டடம் 20.08.2013 அன்று சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## 2.20. திருவண்ணாமலை ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம்



திருவண்ணாமலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணி **15.90** கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்றது.

2.20.1. சிவகங்கையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணி **8.75** கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்றது.

2.20.2. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணி **3.098** கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்றது.

## 2.21. சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகர் அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டடம்



சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகர் அரசு அலுவலர் குடியிருப்பு வளாகத்தில் 15.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 126 புதிய குடியிருப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 03.03.2012 அன்று திறந்து வைத்தார்கள்.

## 2.22. சென்னை பூங்கா நகரில் மாநில நுகர்வோர் குறைகள் முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைகள் முறையீட்டு மன்றக் கட்டடம்



சென்னை பூங்கா நகரில் மாநில நுகர்வோர் குறைகள் முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைகள் முறையீட்டு மன்றக் கட்டடம் கட்டும் பணி **3.44** கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்றது.

## 2.23. சென்னை பூங்கா நகரில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய புதிய கட்டடம்



சென்னை பூங்கா நகரில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி 18.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 27.09.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## 2.24. சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம்



சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் பணி **60.00** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு **18.07.2014** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## 2.25. சிவகங்கையில் வீரத்தாய் குயிலி அவர்களுக்கு நினைவுச் சின்னம்



சிவகங்கையில் வீரத்தாய் குயிலி அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் பணி **27.50** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு **18.07.2014** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

# 3. நடைபெற்று வரும் பணிகள்

## 3.1. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

### 3.1.1. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய கலையரங்கம்



சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் முன்பு இருந்த கலைவாணர் அரங்கம் இடிக்கப்பட்ட இடத்தில் புதிய பிரமாண்ட கலையரங்கம் கட்டப்படும் என சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதனை அடுத்து, இக்கலையரங்கத்திற்கான வரைபடத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். இப்பணிகள் 61.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 31.08.2015க்குள் பணிகள் முடிக்கப்படும்.

### 3.1.2. தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம்



தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் வீரபாண்டியகட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் பணி **1.20** கோடி ரூபாய் மதிப்பீட்டில், நடைபெற்று வருகிறது. **31.08.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.1.3. சென்னை, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வளாகத்தில், வண்ணத்துப்பூச்சி இல்லக் கட்டடம் கட்டும் பணி **2.34** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.08.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.1.4. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள இராஜாஜி மண்டபத்தை புதுப்பிக்கும் பணி **75.00** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.1.5. சென்னையில் உள்ள இசைக் கல்லூரி வளாகத்தில் உள்ள கட்டடங்களை, புதுப்பித்தல், மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணி **3.87** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.1.6. சென்னை எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் தங்கும் விடுதி கட்டடம் கட்டும் பணி **2.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.10.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

### 3.2.1. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை




சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்க **123.30** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. **30.6.2015**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.2.2. கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நூற்றாண்டு விழா கட்டடம்**



கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நூற்றாண்டு விழா கட்டடம் கட்டும் பணிகள் 50.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 31.10.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.2.3. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நூலகக் கட்டடம் கட்டும் பணி 3.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 14.10.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.2.4.** சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், மாணவியர் விடுதிக் கட்டடம் **(450** மாணவிகள்**)** கட்டும் பணி **20.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **25.05.2015**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.2.5.** காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் பாதுகாப்புச் சுவர் கட்டும் பணி **3.55** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.2.6.** சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள பிரேத பரிசோதனை மையக் கட்டடத்தினை மேம்படுத்தும் பணி **1.75** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.2.7.** சென்னை கிண்டி, கிங் நோய் தடுப்பு மருந்து நிலைய மையக் கட்டடம் கட்டும் பணி **7.36** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.08.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.2.8.** காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 2.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 30.11.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.2.9.** சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் உள்ள பன்னடுக்கு கட்டடத்தின் இரண்டாம் தளம் கட்டும் பணி 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 31.08.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.2.10.** சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் உள்ள பிரேத பரிசோதனை மையக் கட்டடத்தினை மேம்படுத்தும் பணி 1.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 31.08.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.2.11. தேசிய ஊரக சுகாதாரக் குழு திட்டப் பணிகள்



**ஆர்.சி.எச். மையக் கட்டடம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம்**

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களை தரம் உயர்த்தும் பணிகள் | 272 | 188.36 |
| 2 | புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் | 340 | 87.64 |
| 3 | சிறு கட்டுமானப் பணிகள் | 3974 | 306.78 |
| 4 | ஏ.என்.எம். மற்றும் ஜி.என்.எம் பள்ளிக் கட்டடங்கள் | 5 | 13.75 |
| 5 | மகப்பேறு மையக் கட்டடங்கள் | 73 | 11.21 |
| 6 | முதன்மைப் பரிந்துரைப் பிரிவு கட்டடங்கள் | 227 | 150.30 |

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 7 | ஆர்.சி.எச். திட்டம் – அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர் மற்றும் கஸ்தூரிபாய் காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை, சென்னை | 2 | 79.90 |
| 8 | ஆர்.சி.எச். மையம், சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி | 5 | 111.78 |
| 9 | பயிற்சி மையக் கட்டடத்தினை மேம்படுத்துதல் – அரசு மகப்பேறு மருத்துவமனை, எழும்பூர், சென்னை மற்றும் மக்கள் நல்வாழ்வு மையம், பூந்தமல்லி | 2 | 2.35 |
| 10 | பல்வகை மருத்துவப் பணியாளர் (ஆண்கள்) பயிற்சி மையம் | 6 | 4.91 |
| 11 | மருத்துவமனை நிர்வாகப் பயிற்சி மையம் மற்றும் மருத்துவமனை பிரிவு மேம்படுத்துதல், டி.எம்.எஸ் வளாகம், சென்னை | 1 | 10.00 |
| 12 | 8 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மகப்பேறு மருத்துவமனைப் பிரிவு | 8 | 48.00 |
| | மொத்தம் | 4915 | 1014.98 |

மேற்காணும் பணிகளில், 3387 பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3.3. வருவாய்த் துறை

### 3.3.1. தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம்



தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் 25.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 31.07.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

### 3.3.2. திருப்பூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம்



திருப்பூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகக் கட்டடம் 52.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 30.09.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

### 3.3.3. கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம்



கடலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் **25.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.08.2015**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

### 3.3.4. கோயம்புத்தூர் ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடம்



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டடம், **19.80** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.08.2015**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.3.5. நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடம்**



நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடம் கட்டும் பணி 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 31.10.2015க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.3.6. திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் கோட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் 2.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 31.10.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.3.7.** கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலம், திருவள்ளூர் மாவட்டம் மாதவரம், திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம், காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்கநல்லூர், வேலூர் மாவட்டம் ஆம்பூர் ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், **12.12** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், மடத்துக்குளம், ஆம்பூர், குறிஞ்சிப்பாடி மற்றும் குத்தாலம் ஆகிய இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய பணிகள் தொடங்கப்படவுள்ளன.

**3.3.8.** **20** இடங்களில் வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் **2.64** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.3.9.** **114** இடங்களில் கிராம நிர்வாக அலுவலக கட்டடம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டும் பணிகள் **7.94** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

3.3.10. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடம் (மூன்றாம் தளம்) கட்டும் பணி **10.14** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2015**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.3.11. சென்னை சேப்பாக்கம் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி **2.20** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.12.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.3.12. **100** இடங்களில், குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டும் பணிகள் **12.71** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

3.3.13. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள **2619** கிராம நிர்வாக அலுவலகங்களுக்கான கட்டடங்கள் புதுப்பிக்கும் பணிகள் **25.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

**3.3.14.** இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் பெருந்திட்ட வளாகத்தில் **26** அலுவலகங்களின் ஒருங்கிணைந்த வளாகக் கட்டடம் மற்றும் கூட்ட அரங்கு கட்டும் பணி **11.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **30.11.2015**க்குள் பணிகள் முடிக்கப்படும்.




**இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் பெருந்திட்ட வளாகத்தில் ஒருங்கிணைந்த அலுவலக வளாகக் கட்டடம்**

## 3.4. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை

**3.4.1.** காஞ்சிபுரம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், மதுரை, திருநெல்வேலி, ஈரோடு, சேலம், பெரம்பலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், இராமநாதபுரம், தஞ்சாவூர், கடலூர்,

தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.




கால்நடை மருந்தகம், சூரன்குடி, தூத்துக்குடி மாவட்டம்

3.4.2. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் 335 கால்நடை மருந்தகங்கள், 15 கால்நடை மருத்துவமனைகள், 3 கால்நடை நோய் நுண்ணறிவு மையங்கள், 2 பாலிகிளினிக் மையங்கள், 5 கருவூட்டல் மையங்கள் மற்றும் 12 கால்நடைப் பண்ணைகள் ஆகியவை கட்டும் பணிகள் 117.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

**3.4.3.** **85** கால்நடை மருந்தகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் **12.75** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

**3.4.4.** தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள ஒரத்தநாடு கால்நடை அபிவிருத்தி பண்ணையில் உழவர்களுக்காக பயிற்சி நிலையக் கட்டடம் **1.56** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.



**தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள ஒரத்தநாடு கால்நடை அபிவிருத்தி பண்ணையில் உழவர்களுக்காக பயிற்சி நிலையக் கட்டடம்**

**3.4.5.** தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் **2012–2013**ன் கீழ் **10** இடங்களில் **3.40** கோடி ரூபாய் மதிப்பீட்டில் திரவ நைட்ரஜன் சேமிப்புக் கிடங்கு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.4.6.** **142** ஊரக கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகக் கட்டடங்கள் **16.56** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3.5. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை

**3.5.1.** ஈரோடு மாவட்டம், பவானிசாகர் குடிமைப் பணி பயிற்சி மையத்தில், புதிய உட்கட்டமைப்பு வசதிகள், பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த குடியிருப்பு வளாகம், இதர கட்டடங்கள் மற்றும் உட்புறச்சாலைகள் ஆகியவை **33.42** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணி நடைபெற்று வருகின்றன. **31.10.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.



**பிரதானக் கட்டடம்**



நூலகக் கட்டடம்




கலையரங்கம்

**3.5.2.** சென்னை, அண்ணா மேலாண்மை நிலையத்தினை **94.78** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. **31.10.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.6. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

**3.6.1.** நாமக்கல்லில் மாவட்ட நுகர்வோர் குறைகள் முறையீட்டு மன்றக் கட்டடம் கட்டும் பணி **40.95** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.6.2.** ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட நுகர்வோர் குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி **40.00** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.08.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.6.3.** சென்னை, கோடம்பாக்கத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மண்டல அலுவலகக் கட்டடம் கட்டும் பணி **88.77** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.08.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.7. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

3.7.1. பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவர்களுக்காக விடுதிகள் கட்டும் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :–

| வ எண் | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 50 மாணவர்கள் தங்கும் வகையில் விடுதிகள் | 416 | 142.47 |
| 2 | 100 மாணவர்கள் தங்கும் வகையில் 25 விடுதிகள் மற்றும் 50 மாணவர்கள் தங்கும் வகையில் 25 விடுதிகள் | 50 | 32.89 |
| 3 | 50 மாணவர்கள் தங்கும் வகையில் விடுதிகள் | 25 | 13.68 |
| 4 | 50 மாணவர்கள் தங்கும் வகையில் விடுதிகள் | 25 | 12.98 |
| 5 | 50 மாணவர்கள் தங்கும் வகையில் விடுதிகள் | 25 | 13.50 |

| வ எண் | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 6 | சூரிய மின் அமைப்புடன் கூடிய 50 மாணவர்கள் தங்கும் வகையில் 69 விடுதிகள், 100 மாணவர்கள் தங்கும் வகையில் 14 விடுதிகள் மற்றும் 200 மாணவர்கள் தங்கும்வகையில் 1 விடுதி | 84 | 64.48 |
| 7 | சூரிய மின் அமைப்புடன் கூடிய 50 மாணவர்கள் தங்கும் வகையில் 41 விடுதிகள், 100 மாணவர்கள் தங்கும் வகையில் 15 விடுதிகள் | 56 | 50.01 |
| 8 | சூரிய மின் அமைப்புடன் கூடிய 50 மாணவர்கள் தங்கும் வகையில் 21 விடுதிகள், 100 மாணவர்கள் தங்கும் வகையில் 47 விடுதிகள் | 68 | 85.94 |
| | **மொத்தம்** | **749** | **415.95** |

மேற்கண்ட பணிகளில், 530 பணிகள் முடிக்கப்பட்டன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.7.2.** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ மாணவியருக்கான **575** விடுதிக் கட்டடங்களுக்கு, **25.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



**மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி, நெருப்பூர், தருமபுரி மாவட்டம்**

## 3.8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை



3.8.1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினர் பண்பாட்டு ஆதார மையம் கட்டும் பணிகள் 10.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.



**3.8.2.** தருமபுரி மாவட்டம், சித்தேரியில் பழங்குடியினர் நல 100 மாணவர்கள் மற்றும் 100 மாணவியர் தங்கும் விடுதி (2 எண்ணிக்கை) கட்டும் பணிகள் 4.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 31.3.2015க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.9. கடலோரப் பகுதி பேரிடர் பாதிப்பு குறைப்புத் திட்டம்



சமூக நலக் கூடம், குடிகாடு, கடலூர் மாவட்டம்

**3.9.1.** கடலோரப் பகுதிகளில் பேரிடர் குறைப்புத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் 294.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழகத்தின் 12 கடலோர மாவட்டங்களில் 121 பல்நோக்கு பேரிடர் பாதிப்பு குறைப்பு மையக் கட்டடங்கள்

கட்டும் பணிகள் பின்வருமாறு:—

| வ எண். | மாவட்டம் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 5 | 14.86 |
| 2 | காஞ்சிபுரம் | 7 | 17.70 |
| 3 | விழுப்புரம் | 11 | 22.52 |
| 4 | கடலூர் | 14 | 47.20 |
| 5 | நாகப்பட்டினம் | 8 | 21.77 |
| 6 | திருவாரூர் | 6 | 25.51 |
| 7 | தஞ்சாவூர் | 14 | 24.83 |
| 8 | புதுக்கோட்டை | 10 | 20.27 |
| 9 | இராமநாதபுரம் | 23 | 53.72 |
| 10 | தூத்துக்குடி | 5 | 11.47 |
| 11 | திருநெல்வேலி | 6 | 17.30 |
| 12 | கன்னியாகுமரி | 12 | 17.10 |
| | **மொத்தம்** | **121** | **294.25** |

மேற்கண்ட பணிகளில், **19** பணிகள் முடிக்கப்பட்டன எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3.10. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**3.10.1.** சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் **4.50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் தங்கும் விடுதிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.12.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.10.2.** அரியலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய **5** இடங்களில் **10.12** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வகை உள் விளையாட்டு அரங்கம் கட்டும் பணிகளில், **4** பணிகள் நடைபெற்று வருகின்றன **1** பணி (கோயம்புத்தூர்) தொடங்கப்படவுள்ளது.

**3.10.3.** திருவள்ளூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் நீச்சல் குளம், **2.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.10.4.** திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்லில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் **1.50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.10.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.10.5.** திருவண்ணாமலையில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் **3.60** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.10.6.** தஞ்சாவூரில் பல்நோக்குஉள்விளையாட்டு அரங்கம் **1.50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.08.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.10.7.** மதுரையில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணி **1.50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.11. போக்குவரத்துத் துறை

### 3.11.1. திருவள்ளூர் மாவட்டம், பெத்திக்குப்பத்தில் நவீன ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி



திருவள்ளூர் மாவட்டம், பெத்திக் குப்பத்தில் நவீன ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி அமைக்கும் பணி **105.84** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.05.2015**க்குள் முடிக்கப்படும்.

**3.11.2. திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப் பூண்டியில் சர்வதேச வாகனம் ஓட்டுதல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையக் கட்டடம்**



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் சர்வதேச வாகனம் ஓட்டுதல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி **12.13** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

3.11.3. திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் அமைக்கும் பணி 1.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 25.02.2015க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.11.4. திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் போக்குவரத்துத்துறை பிரிவு அலுவலகக் கட்டடம், கட்டும் பணி 94.45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 31.10.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.11.5. கோயம்புத்தூர் மாவட்டம், கோபாலபுரத்தில் சோதனைச் சாவடி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 10.56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 31.07.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.11.6. ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் சோதனைச் சாலை அமைக்கும் பணிகள் 1.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 30.09.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.11.7. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 81.52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 31.07.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.12. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

### 3.12.1. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள நன்மங்கலம் காப்புக்காட்டில் தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்ட மேலாண்மை அலுவலகக் (TBGP) கட்டடம்



காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள நன்மங்கலம் காப்புக்காட்டில் தமிழ்நாடு

உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்ட மேலாண்மை அலுவலகக் (Tamil Nadu Bio Diversity Conservation and Greening Project) கட்டடம் **6.90** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.12.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.13. சமூக நலத்துறை

**3.13.1.** விழுப்புரம், சென்னை, இராணிப்பேட்டை, விருதுநகர், தூத்துக்குடி, தருமபுரி, தஞ்சாவூர், செங்கல்பட்டு மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் குழந்தைகள் இல்லம், சிறப்பு இல்லக் கண்காணிப்பாளர் மற்றும் நிர்வாகப் பணியாளர் குடியிருப்புகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணி **15.61** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

## 3.14. பள்ளிக் கல்வித் துறை

**3.14.1.** நபார்டு வங்கி நிதியுதவியுடன், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், பரிசோதனைக் கூடம், குடிநீர், கழிவறை

வசதிகள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல் போன்ற முக்கியத் திட்டப் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :–

| கட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| VII | 195 | 131.69 |
| VIII | 59 | 63.36 |
| IX | 362 | 410.74 |
| X.A | 303 | 235.14 |
| X.B | 259 | 230.30 |
| XI | 131 | 152.72 |
| **மொத்தம்** | **1309** | **1223.95** |

மேற்கண்ட பணிகளில், **1147** பணிகள் முடிக்கப்பட்டன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.



**19 வகுப்பறைக் கட்டடம், குத்தாலம், நாகப்பட்டினம் மாவட்டம்**



**8 வகுப்பறைக் கட்டடம் மற்றும் ஆய்வுக் கூடம், கே.கே.நகர், சேலம் மாவட்டம்**

## 3.14.2. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

3.14.2.1. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 13 மாவட்டங்களில் கல்வியில் பின் தங்கிய ஒன்றியங்களில் 105.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெண்கள் விடுதிகள் கட்டும் பணியின் விவரங்கள் பின்வருமாறு:—

| வ எண் | மாவட்டம் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | கடலூர் | 3 | 7.05 |
| 2 | திருவண்ணாமலை | 1 | 2.66 |
| 3 | விழுப்புரம் | 8 | 18.80 |
| 4 | அரியலூர் | 1 | 2.35 |
| 5 | பெரம்பலூர் | 1 | 2.35 |
| 6 | தருமபுரி | 3 | 7.05 |
| 7 | கிருஷ்ணகிரி | 4 | 9.40 |

| | | | |
|---|---|---|---|
| 8 | சேலம் | 12 | 28.51 |
| 9 | நாமக்கல் | 2 | 5.01 |
| 10 | ஈரோடு | 5 | 12.69 |
| 11 | திருப்பூர் | 2 | 4.70 |
| 12 | கரூர் | 1 | 2.35 |
| 13 | சிவகங்கை | 1 | 2.35 |
| | **மொத்தம்** | **44** | **105.27** |

**3.14.2.2.** அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களில் அரசுப் பள்ளிகளில் 1250 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 502 அறிவியல் ஆய்வகங்கள் கட்டும் பணிகள் 134.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| வ எண். | மாவட்டம் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 51 | 391.03 |
| 2 | கோயம்புத்தூர் | 20 | 154.60 |
| 3 | கடலூர் | 34 | 260.02 |
| 4 | தருமபுரி | 81 | 620.93 |
| 5 | திண்டுக்கல் | 6 | 46.18 |
| 6 | ஈரோடு | 38 | 293.64 |
| 7 | காஞ்சிபுரம் | 73 | 556.69 |
| 8 | கரூர் | 24 | 184.72 |
| 9 | கிருஷ்ணகிரி | 52 | 395.56 |

| | | | |
|---|---|---|---|
| 10 | மதுரை | 29 | 223.37 |
| 11 | நாகப்பட்டினம் | 21 | 161.63 |
| 12 | நாமக்கல் | 52 | 403.06 |
| 13 | நீலகிரி | 2 | 15.56 |
| 14 | பெரம்பலூர் | 13 | 102.39 |
| 15 | புதுக்கோட்டை | 121 | 929.13 |
| 16 | இராமநாதபுரம் | 21 | 165.63 |
| 17 | சேலம் | 118 | 905.54 |
| 18 | சிவகங்கை | 13 | 100.89 |
| 19 | திருவள்ளூர் | 119 | 910.57 |
| 20 | தேனி | 63 | 484.39 |
| 21 | தஞ்சாவூர் | 91 | 696.23 |
| 22 | திருவண்ணாமலை | 143 | 1098.79 |
| 23 | திருப்பூர் | 33 | 252.49 |
| 24 | திருவாரூர் | 15 | 115.45 |
| 25 | திருநெல்வேலி | 53 | 408.59 |
| 26 | திருச்சிராப்பள்ளி | 46 | 354.38 |
| 27 | தூத்துக்குடி | 6 | 47.18 |
| 28 | வேலூர் | 145 | 1108.85 |
| 29 | விழுப்புரம் | 215 | 1641.45 |
| 30 | விருதுநகர் | 54 | 414.62 |
| | **மொத்தம்** | **1752** | **13443.56** |

## 3.15. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**3.15.1.** புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய பதிவு அறைக் கட்டடம் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 31.10.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.15.2. திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் புதிய விருந்தினர் மாளிகைக் கட்டடம் 90.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 30.09.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.15.3. மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் நலத் துறையின் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் 1.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 30.09.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.



மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், விருதுநகர்

3.15.4. சேலம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள் ஒவ்வொன்றும் 1.50 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 7.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், திருச்சிராப்பள்ளி தவிர மற்ற இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.15.5. தூத்துக்குடி மாவட்டம் வேப்பலோடை, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சி நிலையக் கட்டடங்கள் 13.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், வேப்பலோடை, இராதாபுரம், அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருவையாறு மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

3.15.6. மதுரை மாவட்டம், மதுரையில் வேலைவாய்ப்பு மண்டல இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 36.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 30.09.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.15.7. கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் மதுரை மண்டல வேலைவாய்ப்பு இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் ஆகிய கட்டடங்கள், 1.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், மதுரையில் பணி முடிவுற்றது, திருநெல்வேலியில் பணி நடைபெற்று வருகிறது, கோயம்புத்தூரில் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

3.15.8. சென்னை கிண்டியில் தமிழ்நாடு திறன்மேம்பாட்டு கழக அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 1.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 30.11.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.15.9. நாகர்கோவில் (2 எண்ணிக்கை), நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கடல்சார் பொருத்துநர் பயிற்சிக்கான கட்டடங்கள் 1.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், தூத்துக்குடியில் பணி நடைபெற்று வருகிறது. நாகர்கோவில் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 3.16. கருவூலம் மற்றும் கணக்குத் துறை

3.16.1. 14 இடங்களில் சார்நிலைக் கருவூல அலுவலகக் கட்டடங்கள் 7.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.16.2. தூத்துக்குடியில் மாவட்ட கருவூல அலுவலகக் கட்டடம் 1.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 31.08.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.16.3. 33 சார்நிலைக் கருவூல அலுவலகக் கட்டடம் 19.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.16.4. தமிழ்நாட்டில் 250 இடங்களிலுள்ள கருவூலம் மற்றும் கணக்குத் துறை அலுவலகக் கட்டடத்தில், 5 கே.வி.ஏ, 30 கே.வி.ஏ. மற்றும் 40 கே.வி.ஏ. திறன் கொண்ட டீசல் மின்னாக்கிகளை, 7.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

## 3.17. சட்டத் துறை

3.17.1. சென்னை, பெருங்குடியில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்கு புதிய கட்டடங்கள் 59.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இக்கட்டப் பணிகள் 20.08.2015க்குள் முடிக்கப்படும்.



**நிர்வாக அலுவலகக் கட்டடம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், பெருங்குடி, சென்னை**

**3.17.2.** வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு **17** வகுப்பறைகள், முதல்வர் அறை, ஆசிரியர்கள் அறை, நூலகம் மற்றும் அலுவலக அறை கொண்ட கட்டடம் கட்டும் பணி **6.88** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.05.2015**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.17.3.** மதுரை அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில், மாணவர் விடுதி கட்டும் பணி **1.43** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.10.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.17.4.** காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் விடுதிக் கட்டடம் கட்டும் பணி **1.72** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.12.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.18. நீதித் துறை

### 3.18.1. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில், கலையரங்கம் மற்றும் அருங்காட்சியகக் கட்டடம்



சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில், கலையரங்கம் மற்றும் அருங்காட்சியகக் கட்டடம், 10.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 31.07.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.2. மதுரை மற்றும் கோயம்புத்தூரில் நீதித்துறை கழகத்திற்கான மாநில மண்டல மையக் கட்டடம்**



**13**–வது நிதிக்குழு பங்களிப்பு மூலம், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் நீதித்துறை கழகத்திற்கான மாநில மண்டல மையக் கட்டடம் கட்டும் பணி தலா **8.50** கோடி ரூபாய் வீதம், **17.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.3.** சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி **3.88** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **30.11.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.4. தேனி மாவட்டம், பெரியகுளத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்புகள்**



தேனி மாவட்டம், பெரியகுளத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்டும் பணி **6.54** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **04.08.2015**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.5.** சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் வழக்குரைஞர்களுக்கான கூட்டுறவு உணவகக் கட்டடம் மற்றும் வழக்குரைஞர்கள் அறைகள் கட்டும் பணி **4.48** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.6.** சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் **11.89** கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆங்கிலப் பதிவேடுகள் மற்றும் தமிழ் மொழிமாற்றுத் துறைக்கான கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.7.** சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் சட்ட அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடம் கட்டும் பணி **7.45** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.12.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.8.** விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும் பணிகள் **17.32** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. **31.12.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.9.** சிவகங்கை, திருவள்ளூர், ஈரோடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாற்றுவழி பிணக்குகள் தீர்வு மையக் கட்டடம் கட்டும் பணி தலா **1.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

**3.18.10.** கள்ளக்குறிச்சி, சங்கரன்கோவில், திருச்சிராப்பள்ளி, திருவாடானை, திருவள்ளூர், வால்பாறை, விளாத்திகுளம், மேட்டூர், இரணியல், தேன்கனிக் கோட்டை, முதுகுளத்தூர், திட்டக்குடி, மயிலாடுதுறை மற்றும் இளையான்குடி ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி **84.26** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

**3.18.11.** கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டும் பணி **1.42** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **30.11.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.12.** சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, காவலர் ஓய்வு அறை மற்றும் காவலர் கிடங்கு அறை ஆகியவை **1.50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. **31.03.2015**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**3.18.13.** சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, காவலர் ஓய்வு அறை மற்றும் காவலர் கிடங்கு அறை ஆகியவை கட்டும் பணி 72.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.12.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.19. பொதுப்பணித்துறை

**3.19.1. சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் அரசு அலுவலர்களுக்கு, 700 எண்ணிக்கை "சி'' வகை குடியிருப்புகளைக் கொண்ட 7 அடுக்கு மாடிக் கட்டடம்**



சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் அரசு அலுவலர்களுக்கு, 77.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 700

எண்ணிக்கை “சி’’ வகை குடியிருப்புகளைக் கொண்ட 7 அடுக்குமாடிக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 31.08.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.19.2. பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா மாளிகைகள் / ஆய்வு மாளிகை கட்டடங்களில் சூரிய சக்தி மின் அமைப்பு, 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. 31.07.2014க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.19.3. சென்னை சேப்பாக்கத்தில் உள்ள தீயில் சேதமடைந்த கலச மஹால் கட்டடத்தின் ஒரு பகுதியை 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. 31.01.2015க்குள் பணிகள் முடிக்கப்படும்.

3.19.4. சென்னை, தரமணியில் மாநில நீர்வள மேலாண்மை முகமைக்காக (SWaRMA) புதிய அலுவலகக் கட்டடம் 5.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணி நடைபெற்று வருகிறது. 31.01.2015க்குள் பணிகள் முடிக்கப்படும்.

## 3.20. பொதுத்துறை

3.20.1. சென்னை, தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டடத்தில் உள்ள பொதுக் கழிவறைகளை பழுதுபார்த்து புதுப்பித்தல் மற்றும் இக்கட்டடத்தின் அனைத்து தளங்களிலும் ஒப்பனை உட்கூரை (False ceiling) அமைக்கும் பணி **5.67** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

## 3.21. வேளாண்மைத்துறை

3.21.1. **79** இடங்களில் விதை சேமிப்பு கிடங்கு கட்டடங்கள், **19.62** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.21.2. **10** இடங்களில் கிசான் பவன் / உழவர் மையக் கட்டடங்கள், **15.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.21.3. **10** இடங்களில் விதை சேமிப்பு கிடங்கு கட்டடங்கள் **(1000** மெட்ரிக் டன் கொள்ளளவு), **3.25** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.21.4. 2 இடங்களில் விதை பதப்படுத்தும் பிரிவு கட்டடம் (500 மெட்ரிக் டன் கொள்ளளவு) 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.21.5. 6 இடங்களில் மாநில பூச்சிக்கொல்லி பரிசோதனை மையக் கட்டடம், 3.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.21.6. 25 இடங்களில் விதை பதப்படுத்தும் பிரிவு கட்டடத்தினை (1000 மெட்ரிக் டன் கொள்ளளவு) 6.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3.22. வணிக வரி மற்றும் பதிவுத்துறை

3.22.1. வணிக வரி அலுவலகக் கட்டடங்கள் 17 இடங்களில், 32.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் பின்வருமாறு:—

| வ. எண் | இடம் | மதிப்பீடு ( ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சேலம் | 981.00 |
| 2 | விழுப்புரம் | 286.00 |
| 3 | மயிலாடுதுறை | 203.50 |
| 4 | லால்குடி | 19.00 |

| | | |
|---|---|---|
| 5 | ஈரோடு | 155.10 |
| 6 | புதுக்கோட்டை | 165.00 |
| 7 | சிவகங்கை | 138.60 |
| 8 | வால்பாறை | 235.00 |
| 9 | கோயம்புத்தூர் | 293.70 |
| 10 | கோவில்பட்டி | 25.00 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 250.00 |
| 12 | திண்டுக்கல் | 33.88 |
| 13 | நன்னிலம் | 35.00 |
| 14 | மேட்டுப்பாளையம் | 88.00 |
| 15 | ஸ்ரீரங்கம் | 80.00 |
| 16 | திருவண்ணாமலை | 143.99 |
| 17 | பண்ருட்டி | 149.60 |
| | **மொத்தம்** | **3282.37** |

மேற்கண்ட பணிகளில், 15 பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.



**வணிகவரித்துறை பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி**

**3.22.2. 52** இடங்களில் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள், **26.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



**சார்பதிவாளர் அலுவலகம், ஓமலூர், சேலம் மாவட்டம்**

**3.22.3.** இராணிப்பேட்டை, விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அரியலூர், திருப்பூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் வணிக வரித் துறை அலுவலகக் கட்டடங்கள் **11.18** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகம், சேலம்

**3.22.4.** **24** இடங்களில் சிறிய சோதனைச் சாவடி மற்றும் சோதனை மையங்களை, **6.81** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.22.5.** **7** இடங்களில் பெரிய சோதனைச் சாவடி நிலையங்களை, **2.26** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.22.6.** **48** இடங்களில் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் **26.44** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.22.7.** 17 இடங்களில் பதிவுத் துறைக்கான ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள் **22.46** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.22.8.** 11 சார் பதிவாளர் அலுவலகங்களுடன் கூடிய **4** ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகக் கட்டடம் மற்றும் **35** சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள், **30.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3.23. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

**3.23.1.** 11 மாவட்ட தொழில் மையங்களுக்கான புதிய கட்டடங்கள் மற்றும் **21** மாவட்ட தொழில் மையங்களுக்கான கூடுதல் கட்டடங்கள் மற்றும் புதுப்பித்தல் ஆகியவை, **41.42** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணிகள் நடைபெற்று வருகின்றன.




மாவட்ட தொழில் மையம், நாமக்கல்

## 3.24. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

3.24.1. பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறைக்கான 5 மண்டல அலுவலகங்கள், 15 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 49 கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் 16.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

## 3.25. சிறைத் துறை

3.25.1. தமிழ்நாட்டில் வெவ்வேறு இடங்களில் உள்ள 60 சிறைச்சாலைகள் மற்றும் நீதிமன்றங்களில் காணொலி காட்சி

அறைக் கட்டடம், **1.60** கோடி ரூபாய் (ஒவ்வொன்றும் **2.67** இலட்சம்) மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.25.2.** மதுரை மத்திய சிறைச்சாலையில் கணக்குப் பிரிவு மற்றும் பொதுப் பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி, **84.88** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. **31.07.2014**க்குள் பணிகள் முடிக்கப்படும்.

# 4. 2014–2015ம் ஆண்டு தொடங்கப்படவுள்ள பணிகள்

## 4.1. பொதுத்துறை

### 4.1.1. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய விருந்தினர் மாளிகை



சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், 19.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விருந்தினர் மாளிகை கட்டடத்திற்கான வரைபடங்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். இதற்கான பணிகள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

## 4.2. பொதுப்பணித்துறை



நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், 25 அரசு குடியிருப்புகள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள், 13.12.2013 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் அறிவித்தபடி, நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், "A" மற்றும் "B" பிரிவு அரசு அலுவலர்களுக்கான 25 குடியிருப்புகள் கட்டும் பணி 6.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ளது.

## 4.3. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

### 4.3.1. காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூரில் இசைப் பல்கலைக்கழகம் அமைக்கும் பணி



நிர்வாகக் கட்டடம்



கல்லூரிக் கட்டடம்



கலையரங்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூரில் 12.72 ஹெக்டேர் (31.42 ஏக்கர்) பரப்பளவில் இசைப் பல்கலைக்கழகம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

### 4.3.2. திருவாரூர் மாவட்டம், திருவாரூரில் மனுநீதி சோழன் அவர்களின் நினைவு மண்டபம்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவாரூர் மாவட்டம், திருவாரூரில் மனுநீதி சோழன் அவர்களின் நினைவு மண்டபம் கட்டும் பணி **1.10** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4.3.3. கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா அவர்களின் மணிமண்டபம்




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா அவர்களின் மணிமண்டபம் கட்டும் பணி **1.15** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 4.3.4. சென்னை இராயபுரம் பகுதியில் சிங்காரவேலர் மற்றும் ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபங்கள்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை இராயபுரத்தில் சிங்காரவேலர் மற்றும் ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபங்கள் கட்டும் பணி 2.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 4.3.5. திண்டுக்கல் மாவட்டத்தில், ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் ஆகியோர்களுக்கு மணிமண்டபம்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திண்டுக்கல் மாவட்டத்தில், ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் ஆகியோர்களுக்கு 1.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கும் பணி மேற்கொள்ளப் படவுள்ளது.

### 4.3.6. மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்காக கட்டடங்கள் கட்டும் பணி




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்காக கட்டடங்கள், 23.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

4.3.7. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள நூறாண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்று சிறப்பு மிக்க தேசிய கலைக்கூடக் கட்டடத்தினை, 11.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செப்பனிட்டு புனரமைக்கும் பணி மேற்கொள்ளப் படவுள்ளது.

4.3.8. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் மாநில தகவல் மையக் கட்டடங்கள் 2.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

4.3.9. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம் மாவட்டம், பெருமுக்கலில் உள்ள ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் கோவில் கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4.4. சமூக நலத்துறை

4.4.1. சென்னை திருவல்லிக்கேணி, லேடிவெலிங்டன் கல்லூரி வளாகத்தில், மாற்றுத் திறனாளிகள் துறை ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 1.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4.5. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

4.5.1. சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை

வளாகத்தில், சி.ஆர்.ஆர்.ஐ. குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி 4.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.5.2.** சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில், விரிவுரையாளர் அரங்கத்தினை புதுப்பித்தல் மற்றும் கால்நடைகள் இல்லக் கட்டடம் கட்டும் பணிகள் 4.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.5.3.** இராமநாதபுரத்தில் செவிலியர் பள்ளி மற்றும் விடுதிக் கட்டடம் கட்டும் பணி 7.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.5.4.** திருநெல்வேலி, தஞ்சாவூர், செங்கல்பட்டு ஆகிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு இராயப்பேட்டை மருத்துவமனை ஆகிய இடங்களில் உள்ள பிரேத பரிசோதனை மையக் கட்டடங்களை மேம்படுத்தும் பணி 5.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.5.5. செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில், சி.ஆர்.ஆர்.ஐ. குடியிருப்பு மற்றும் கட்டடம் கட்டும் பணி **6.71** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.5.6. தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டப் பணிகள்**

4.5.6.1. **16** இடங்களில் உள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக் கட்டடங்களை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தரத்திற்கு மேம்படுத்தும் பணி **30.18** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.5.6.2. கரூர் மாவட்டத்தில் **53** இடங்களில் துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி **9.54** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.6. வருவாய்த் துறை**

4.6.1. திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும்

குடியிருப்பு கட்டும் பணி 2.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.6.2.** மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி **2.02** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.6.3.** புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி மற்றும் கறம்பக்குடி, காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி **8.08** கோடி ரூபாய் மதிப்பீட்டில் (ஒவ்வொன்றும் **2.02** கோடி ரூபாய்) மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.6.4.** பின்வரும் இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், வட்டாட்சியர் குடியிருப்புகள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி **57.76** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

| வ எண் | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 4 | 4.44 |
| 2 | வேலூர் | 4 | 4.44 |
| 3 | திண்டுக்கல் | 1 | 2.02 |
| 4 | கிருஷ்ணகிரி | 1 | 2.02 |
| 5 | தஞ்சாவூர் | 2 | 2.22 |
| 6 | புதுக்கோட்டை | 2 | 1.65 |
| 7 | கோயம்புத்தூர் | 4 | 4.44 |
| 8 | கடலூர் | 5 | 5.83 |
| 9 | சென்னை | 5 | 10.10 |
| 10 | சேலம் | 4 | 8.08 |
| 11 | திருப்பூர் | 2 | 4.04 |
| 12 | மதுரை | 4 | 6.26 |
| 13 | கரூர் | 2 | 2.22 |
| | **மொத்தம்** | **40** | **57.76** |

## 4.7. கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை

4.7.1. நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் மாவட்ட கால்நடைப் பண்ணை கட்டடத்தினை மேம்படுத்தும் பணி **2.15** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.7.2. கால்நடை மருத்துவமனை, மருந்தகங்கள் மற்றும் இதர மையக் கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய 450 பணிகள் 94.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

4.7.3. 10 இடங்களில் கால்நடை பராமரிப்புத் துறைக்கான நிலையான சோதனை மையக் கட்டடம் கட்டும் பணி 1.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 4.8. போக்குவரத்துத் துறை

### 4.8.1 சென்னை அண்ணாநகரில், போக்குவரத்துத் துறை இணை ஆணையர் (வடக்கு) அலுவலகக் கட்டடம்



சென்னை அண்ணாநகரில் போக்குவரத்துத் துறை இணை ஆணையர் (வடக்கு) அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 2.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.8.2. சென்னை கே.கே.நகரில், போக்குவரத்துத் துறை இணை ஆணையர் (தெற்கு) அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 1.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.8.3. திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம், கட்டும் பணி 1.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.8.4. விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் மற்றும் சோதனை ஓடுதளம் அமைக்கும் பணி 3.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.8.5. தருமபுரி மாவட்டம், ஒசூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 2.32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.8.6.** விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி **52.17** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.8.7.** ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் போக்குவரத்துத்துறை பிரிவு அலுவலகக் கட்டடம் மற்றும் சோதனை ஓடுதளம் கட்டும் பணி **1.26** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ளது.

**4.8.8.** திருப்பூர் மாவட்டம், உடுமலைப் பேட்டையில் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி **78.42** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4.9. பள்ளிக் கல்வித் துறை

**4.9.1.** திருச்சிராப்பள்ளியில் ஆசிரியர் இல்லக் கட்டடம் கட்டும் பணி **3.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.9.2.** சென்னை, சைதாப்பேட்டையில் ஆசிரியர் இல்லத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி **2.50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4.10. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**4.10.1.** கரூர் மாவட்டம், கரூரில் மகளிர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி **2.00** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4.11. கருவூலம் மற்றும் கணக்குத் துறை

**4.11.1.** சென்னை நந்தனத்தில் நிதித் துறையின்கீழ் செயல்படும் அரசு அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த வளாகக் கட்டடங்கள் கட்டும் பணி **21.60** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.11.2.** கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவிலில் சார் கருவூல அலுவலகக் கட்டடம் கட்டும் பணி **44.84** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ளது.

**4.11.3.** இராமநாதபுரம்மாவட்டம், முதுகுளத்தூரில் சார்கருவூல அலுவலகக் கட்டடம் கட்டும் பணி **55.00** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4.12. நீதித்துறை

4.12.1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னையில் உள்ள ஜார்ஜ் டவுன் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம், எழும்பூர் முதன்மைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றக் கட்டடம், எழும்பூர் கூடுதல் முதன்மைக் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம், சைதாப்பேட்டை முதன்மைக் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற சிறுவழக்குகள் நீதிமன்றக் கட்டடம் ஆகிய ஐந்து புராதன நீதிமன்றக் கட்டடங்களை மேம்படுத்தும் பணிகள் 22.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.12.2. தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில், மாற்றுவழி பிணக்குகள் தீர்வு மையக் கட்டடம் கட்டும் பணி தலா 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.12.3. சென்னை எழும்பூரில் உள்ள பெருநகரக் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் கூடுதல்

முதன்மை குற்றவியல் நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டும் பணி **10.89** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**4.12.4.** சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் மாண்புமிகு தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு நீதிபதிகளுக்கான **(5** எண்ணிக்கை) குடியிருப்புக் கட்டடங்கள் கட்டும் பணி **4.89** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ளது.

**4.12.5.** திருமயம், நாகர்கோவில், செஞ்சி ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி **29.13** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4.13. வேளாண்மைத் துறை

**4.13.1.** சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டி மற்றும் தலைவாசல் ஆகிய இடங்களில், வேளாண் விரிவாக்க மையக் கட்டடம் கட்டும் பணி **1.20** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ளது

4.13.2. சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டியில் உரக் கட்டுப்பாடு ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி **59.00** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 4.14. வணிகவரி மற்றும் பதிவுத்துறை

4.14.1. கன்னியாகுமரி மாவட்டம் வாள்வச்சகோஷ்டம், சிவகங்கை மாவட்டம் தேவக்கோட்டை, வேலூர் மாவட்டம் ஆற்காடு மற்றும் வேலூர், கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர், கடலூர் மாவட்டம் சிதம்பரம், திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி ஆகிய இடங்களில் வணிகவரி அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி **10.85** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ளது.

4.14.2. கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வணிவரி அலுவலகக் வளாகத்தில் வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி **12.34** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

# 5. அமைப்பு

5.1. பொதுப்பணித்துறை கட்டட அமைப்பு, முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கட்டுப்பாட்டில் சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மூன்று மண்டல தலைமைப் பொறியாளர்களின் கீழ், 14 வட்டங்கள் மற்றும் 50 கோட்டங்களைக் கொண்டு இயங்கி வருகின்றன.


5.2. 14 வட்டங்களில், 7 வட்டங்கள் மருத்துவம் அல்லாத பணிகளுக்காகவும், 3 வட்டங்கள் மருத்துவப் பணிகளுக்காகவும், 3 வட்டங்கள் மின் பணிகளுக்காகவும், 1 வட்டம் திட்டம் மற்றும் வடிவமைப்பிற்காகவும் செயல்பட்டு வருகின்றன.

5.3. 50 கோட்டங்களில், 34 கோட்டங்கள் மருத்துவம் அல்லாத பணிகளுக்காகவும், 15 கோட்டங்கள் மருத்துவப் பணிகளுக்காகவும், 1 கோட்டம் கட்டட ஆராய்ச்சி பணிக்காகவும் செயல்பட்டு வருகின்றன.

**5.4.** முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் நிர்வாகத்தின்கீழ், ஒரு கட்டட வரைபடப்பிரிவு தலைமைக் கட்டடக் கலைஞர் தொழில்நுட்ப கட்டுப்பாட்டின்கீழ், முறையே இணைத் தலைமைக் கட்டடக் கலைஞர், முதுநிலை கட்டடக் கலைஞர்கள், கட்டடக் கலைஞர்கள், இளநிலை கட்டடக் கலைஞர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

**5.5.** பொதுப்பணித்துறைப் பணியாளர் பயிற்சி நிலையம் திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் உள்ள இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. இந்நிலையத்தின்கீழ் செயற் பொறியாளர்கள் நிலையில் மூன்று துணை இயக்குநர்களின் கட்டுப்பாட்டில் திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சென்னையில் பொதுப்பணித் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 5.6. கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் செலவினம்




## 6.0. நிதி ஒதுக்கீடு 2014–2015

**6.1.** 2014–2015–ஆம் நிதியாண்டில் கோரிக்கை எண் 39–ன் கீழ் ரூ.1129.45 கோடி நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ்

பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன :—

| வ எண் | பொருள் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| **1** | **மூலதனக் கணக்கு** | |
| (அ) | திட்டம் மற்றும் திட்டம் சாராபணிகள் | 821.54 |
| (ஆ) | கணக்குகளிடையே மாற்றம் | 81.14 |
| 2 | **வருவாய் கணக்கு** | |
| (அ) | பராமரிப்பு | 40.72 |
| (ஆ) | பணியமைப்பு (பொதுப்பணித் துறை தலைமைச் செயலகம் உட்பட) | 186.04 |
| 3 | கடன் கணக்கு | 0.01 |
| | **மொத்தம்** | **1129.45** |

## 6.2. திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகள்— மூலதனக் கணக்கு —கோரிக்கை எண் 39

### துறைவாரியான ஒதுக்கீடு 2014—2015

| வ. எண். | துறை | நிதி ஒதுக்கீடு (ரூ.கோடியில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | பொதுப்பணித் துறை | 21.11 | 2.57 |
| 2 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | 269.61 | 32.82 |
| 3 | உள்துறை | 113.21 | 13.78 |
| 4 | பதிவுத் துறை | 32.14 | 3.91 |
| 5 | வருவாய்த் துறை | 162.26 | 19.75 |
| 6 | பிற துறைகள் | 223.21 | 27.17 |
| | **மொத்தம்** | **821.54** | **100.00** |

6.3. இவை தவிர, செலுத்துக் கணக்குத் தலைப்பின்கீழ், நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் பள்ளிக் கட்டடப் பணிகள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கான விடுதிகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள், கடலோரப் பகுதி பேரிடர் பாதிப்பு குறைப்புத் திட்டப் பணிகள், மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மருத்துவமனைக் கட்டடப் பணிகள் போன்ற கட்டடப் பணிகளையும் பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

## 6.4. அரசுக் கட்டடங்கள் பராமரிப்பு

### 6.4.1. பொதுப்பணித் துறை கட்டடங்கள்– பராமரிப்பு

பொதுப்பணித்துறை கோரிக்கை எண்.39ன் கீழ் 2014–2015–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், பொதுப்பணித் துறை அலுவலகங்கள், அரசு அலுவலர்

குடியிருப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் அரசு மாளிகைகள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக, **40.72** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 6.4.2. இதர துறை கட்டடங்கள்–பராமரிப்பு

மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகள், பள்ளிகள், மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத் துறை, உள் துறை, பதிவுத் துறை அலுவலகங்கள், மேதகு ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலகம், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் அரசு மாளிகைகள் மற்றும் பிற அரசுக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக **2014–2015**–ஆம் ஆண்டில் **224.12** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப் படவுள்ளன.

**ஓ.பன்னீர்செல்வம்**
நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்